செ. கு. எண்: 013 நாள்: 26.01.2019

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் வாழ்த்துச் செய்தி – 26.1.2019

இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் திரு.பிரணாப் முகர்ஜி அவர்களுக்கு நாட்டின் உயரிய விருதான **'பாரத ரத்னா'** விருது கிடைத்ததற்காக எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் தலைசிறந்த அரசியல் மேதையான திரு.பிரணாப் முகர்ஜி அவர்கள் நமது நாட்டுக்காக பல வருடங்கள் தன்னலம் கருதாமல் சேவையாற்றினார். அவர்கள் நீண்ட காலம் நாடாளுமன்ற உறுப்பினராகவும், மத்திய அரசில் பல முக்கிய துறைகளின் அமைச்சராகவும், இந்திய திருநாட்டின் குடியரசுத் தலைவராகவும் திறம்பட மக்கள் பணியாற்றினார்.

திரு.பிரணாப் முகர்ஜி அவர்களுக்கு **'பாரத ரத்னா'** விருது கிடைத்ததற்கு தமிழ்நாடு மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**K.பழனிசாமி**
**தமிழ்நாடு முதலமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**